# பாரதி தமிழ்ப்பேரவை அறிக்கை 2018-2019




புாரதி தமிழ்ப் பேரவை கல்லூரி மாணவியரிடையே இலக்கிய வளத்தையும் மொழி ஆளுமையையும் வளர்க்கும் விதத்தில் பல்வேறு போட்டிகளை நிகழ்த்தி வருகிறது. ஆண்டு தோறும் முத்தமிழ் விழா, சிறப்புச்சொற்பொழிவுகள், சர்வோதைய தினத்தன்று நடத்தும் சத்தியசோதனைத் தேர்வு, திருக்குறள் தேர்வு, முதலானவற்றை நடத்தி இயற்றமிழையும், இசைத்தமிழையும், நாடகத்தமிழையும் பெருமையோடு வளர்த்து வருகிறது. இவ்வாண்டு உதவிப்பேராசிரியர்கள் திருமதி ச. பாலசரசுவதி மற்றும் திருமதி சு. கவிதா பாரதி தமிழ் பேரவையின் பொறுப்பாசிரியர்களாக இருந்து அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பான முறையில் நடத்தி தந்துள்ளார்கள். பேரவையின் அனைத்து இலக்கிய நிகழ்வுகளுக்கும் தலைமையேற்று உறுதுணையாகவும் ஆலோசகராகவும் இருந்து சிறப்பாகச் செயல்பட்டவர் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் தி. செந்தமிழ்ச்செல்வி அவர்கள்.

பாரதி தமிழ்ப்பேரவையில் பேச்சு, கவிதை, சிறுகதை, கட்டுரை போட்டிகளை அனைத்துத் துறைகளுக்கிடையே 28.8.2018, 30.8.2018ஆகிய இரு நாட்கள் நடத்தப்பட்டு மாணவியர் தேர்ந்தெடுக்கபட்டனர்.

## போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விவரம்

| போட்டி | முதல்பரிசு | இரண்டாம்பரிசு | மூன்றாம்பரிசு |
|---|---|---|---|
| 1.கவிதை (மனிதா, நீ மனிதன் தானா!) | மு. சங்கீதா ஆங்கிலம் மூன்றாமாண்டு | வெ. நந்தினி தேவி கணிதம் இரண்டாமாண்டு | சு. அக்ஷயா ஆங்கிலம் இரண்டாமாண்டு |
| 2.பேச்சு (மாணவர் எழுச்சியும் அப்துல் கலாமும், தீதும் நன்றும் பிறர்தர வாரா) | ரா. வாத்சல்ய வர்ஷா வணிகவியல் இரண்டாமாண்டு | சீ.பா. சுவேதா வரலாறு முதலாமாண்டு | ச. சுவேதா புள்ளியியல் முதலாமாண்டு |
| 3.கட்டுரை (தூய்மை இந்தியா) | லி. சந்தியா வேதியியல் மூன்றாமாண்டு | மு. அனுசுயா வணிகவியல் முதலாமாண்டு | வி. நவீனா வணிகவியல் முதலாமாண்டு |
| 4.சிறுகதை (சிந்தனை செய் மனமே) | பு. பிரியதர்ஷினி வணிகவியல் முதலாமாண்டு | பா. ரூபினி பொருளியல் முதலாமாண்டு | பி. சுவேதா புள்ளியியல் முதலாமாண்டு |

## சிறப்புச்சொற்பொழிவு - 1

தமிழ்த்துறை சார்பில் 21.:.9.:.2018 அன்று நடைபெற்ற சிறப்புச்சொற்பொழிவில், எத்திராஜ் கல்லூரி, தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், **முனைவர் கவிஞர் கு. உமாதேவி**, திரைப்படப்பாடலாசிரியர் அவர்கள், **“புதுக்கவிதை”** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். முதலாமாண்டு மாணவியர் அனைவரும் பயன் பெறும் வகையில் சிறப்புரை அமைந்தது.



சிறப்புச் சொற்பொழிவு - 2

தமிழ்த்துறைச் சார்பில் 18.1.19 அன்று நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவில் காரைக்கால் தேசியத்தொழில் நுட்ப வாரிய தலைவர், திருமதி சுமதி வெங்கடேஷ் அவர்கள் “நவீன இந்தியாவின் விவேகானந்தரின் பங்களிப்பு” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். பெண்கள் தற்காப்புக்கலை கற்றுக்கொள்வது அவசியம். பெண்களின் முன்னேற்றமே பாரதத்தின் முன்னேற்றம். பெண்களின் பொறுமையும், தன்னம்பிக்கையும் குடும்பத்தைச் சிறப்படையச் செய்யும். பெண்கள் தங்களின் குறிக்கோளை எப்படி தீர்மானிக்க வேண்டும் என்றும் அதை எப்படி செயல்படுத்த வேண்டுமென்றும் மிகத் தெளிவாக விளக்கினார். அவர்களின் சிறப்புரை மாணவியர் பயன் அடையும் வகையில் அமைந்தது.




# முத்தமிழ் விழா

“பெண்களுக்குக் கல்வி வேண்டும்” என்ற உயரிய நோக்கத்துடன் தொடங்கப்பட்ட ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரிக்கு இந்த ஆண்டு பொன்விழா கொண்டாடப்படுகிறது. எமது கல்லூரியைச் சிறப்பிக்கும் விதமாக முத்தமிழ் விழா 01.02.2019 அன்று காலை 9.30 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி. இரா. கீதா அவர்கள் வரவேற்புரை வழங்க, இனிதே தொடங்கியது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் தி. செந்தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார்.

சிறப்பு விருந்தினர் தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்ற, முத்தமிழ் விழா இனிதே தொடங்கியது. கி. வைத்தியநாதன் அவர்கள் முத்தமிழ் விழாவின் இயல் நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார். சிறப்பு விருந்தினர் உரையாற்றுகையில் "உலகத்தில் விரைந்து செல்லக் கூடியது சொல். ஒவ்வொரு மாணவியும் தாய்மொழி தவிர இரு மொழியாவது கற்றுக் கொள்ள வேண்டும். உன் இளமைப் பருவத்தில் உன்னால் எவ்வளவு படிக்க முடியுமோ அத்தனையும் படித்து பதிவேற்றம் செய்ய வேண்டும்" என்றார். சிறப்பு விருந்தினரால் மூன்றாம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவி மு. சங்கீதாவின் புதுக்கவிதை நூலான 'கிழிந்த சட்டைபை' வெளியிடப்பட்டது. முதல்வர் இரா. கீதா பெற்றுக் கொண்டார். கல்லூரியின் அனைத்துத் துறைகளுக்கிடையே நடைபெற்ற கவிதை, பேச்சு, கட்டுரை, சிறுகதை போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவியருக்குச் சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கினார்.





அடுத்ததாக இசைத்தமிழைச் சிறப்பு செய்ய ‘இசைக்கவி’ இரமணன் அவர்கள் வந்திருந்தார். அவர் பெண்ணின் சிறப்பு, தாய்மையின் பெருமை, அண்ணன் தங்கை உறவு, தந்தை மகள் உறவு ஆகிய உறவுகளின் மேன்மையையும் பாடல் வழியில் மிக இனிமையாகப் பாடிக் காட்டினார். மேலும் “எவன் ஒருவன் இசைக்கு மதிப்பு கொடுக்கிறானோ அவனே மகிழ்ச்சியாக இருக்கிறான். எங்கும் நிறைந்து உள்ளது இசை, செவி திறந்தால் சித்தத்திற்குள் நுழையும் தன்மை கொண்டது இசை” என்று சிறப்புரையாற்றினார்.


முத்தமிழ் விழா
Shrimathi Devkunvar Nanalal Bhatt
Vaishnav College For Women

எம் கல்லூரி மாணவர்கள் தனிப்பாடல், குழுப்பாடல், வீணை, பரதம், நாட்டுப்புற நடனம் ஆடி முத்தமிழ் விழாவிற்கு மேலும் அணி சேர்த்தனர். இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து நாடகத்தமிழை சிறப்பு செய்ய சிறப்பு விருந்தினராக ‘கிரேஸி கிரியேசன்ஸ்’ நாடகத் தென்றல் அப்பா ரமேஷ் அவர்கள் வந்தார்.



எம் கல்லூரி மாணவியர் நடித்த ‘இளையான்குடி மாற நாயனார்’ மற்றும் ‘பக்த பிரகலாதா’ நாடகங்களைப் பார்த்து சிறப்பாக நடித்ததாகக் கூறினார். அவர் சிறப்புரையாற்றுகையில் கூத்து கலையே சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து நாடகமாக இன்று மாறி உள்ளது. ஒரு நாடகத்திற்கு நடிப்பு, ஒப்பனை, அரங்கு, ஒலி, ஒளி அமைப்பு எல்லாம் மிக முக்கியம் என்றார். இம்முத்தமிழ் விழா மாணவியர் பயன்பெறும் வகையில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. வாழிய செந்தமிழ் மற்றும் நாட்டு பண்ணுடன் முத்தமிழ் விழா இனிதே நிறைவுப் பெற்றது.

## தமிழ்த்துறை

## பன்னாட்டுக் கருத்தரங்க அறிக்கை 2018-2019

ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி(தன்னாட்சி)யின் பொன் விழா ஆண்டான 2018-2019–ம் ஆண்டில் தமிழ்த்துறையும் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையமும், அனுஜன் அறக்கட்டளையும் இணைந்து மார்ச்சு 22 அன்று நடத்திய முதலாவது பன்னாட்டுக் கருத்தரங்கம் கல்லூரி பொன்விழா கலையரங்கில் நடைபெற்றது.





கருத்தரங்க விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி. இர. கீதா அவர்கள் தலைமை தாங்கினார். முன்னாள் முதல்வர் முனைவர் (திருமதி) தங்கம்சேஷன் அவர்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். திருமதி. தி.செந்தமிழ்ச்செல்வி வரவேற்புரையும், கருத்தரங்க நோக்கவுரையும் வழங்கினார். அந்த நோக்க உரையில் மாணவியரிடம் பக்தியுணர்வையும், அதன் மூலம் பண்பாட்டையும் ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்றார். மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திருமதி. கலா கே தாக்கர் அவர்களும், அனுஜன் அறக்கட்டளையின் தலைவர் சிங்கப்பூர் உயர்திரு. வ. வாசுதேவன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கலா கே தாக்கர் அவர்கள் உரையாற்றுகையில் “எவன் ஒருவனுக்கு துன்பம் ஏற்படுகிறதோ அதை அவன் சொல்லும் முன்னே சென்று உதவுபவனே வைணவன்” என்றும் இக்கல்லூரி மாணவியர் கண்ணனாகவும், ஆசிரியர்கள் யசோதையாகவும் இக்கல்லூரி ஆயர்ப்பாடியாகவும்

காட்சியளிப்பதாகக் கூறினார். அதனைத் தொடர்ந்து விருது வழங்கும் விழா நடைபெற்றது.




அதில் கார்க் நிறுவனத்தின் தலைவரும் மேனாள் கல்லூரித் தலைவருமான உயர்திரு எஸ்.என். பட் அவர்களுக்கு "பெரியாழ்வார்" விருதினை அனுஜன் அறக்கட்டளையின் தலைவரான சிங்கப்பூர் உயர்திரு. வ. வாசுதேவன் வழங்கினார். கல்லூரிச் செயலர் உயர்திரு. சந்திரகாந்த் எம். டோலியா அவர்களுக்கு "திருமழிசை ஆழ்வார்" விருதினைப் பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் இணைப்பேராசிரியர் முனைவர்.திரு.வா.மு.சே.ஆண்டவர் வழங்கினார். இவ்விருதினைக் கல்லூரி செயலர் சார்பாக கல்லூரி முதல்வர் பெற்றுக் கொண்டார். முனைவர் இரா. அரங்கராஜன் அவர்களுக்கு "நம்மாழ்வார்" விருதினை மருத்துவர் கணேஷ் பிரசாத் வழங்கினார். முனைவர். ஸ்ரீபரகால ராமானுஜதாஸர் அவர்களுக்கு "திருமங்கையாழ்வார்" விருதினைக் கண் மருத்துவர் பிரேம் ராஜ் வழங்கினார். முதுமுனைவர். எம்.ஏ. வெங்கடகிருஷ்ணன் அவர்களுக்கு "ராமானுஜர்" விருதினை உயர்திரு இராமன் வழங்கினார்.

கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையத்தின் இயக்குநர் முனைவர். திரு. மோ. பாட்டழகன் நன்றியுரையாற்ற

துவக்கவிழா இனிதே நிறைவுற்றது. பல்வேறு கல்லூரியிலிருந்து வந்திருந்த பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும் தங்கள் கட்டுரைகளைத் தங்களுக்குரிய அமர்வுகளில் சமர்ப்பித்தனர். அதற்கு இராணி மேரி கல்லூரியின் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர். திருமதி. கமலா முருகன் அவர்களும், சீர்காழி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரும், பொறுப்பு முதல்வருமான முனைவர் திருமதி. மா. சாந்தி அவர்களும் அமர்வுத் தலைவர்களாகச் சிறப்பித்தனர்.



கருத்தரங்கின் நிறைவு விழாவின் போது உதவிப்பேராசிரியர் திருமதி கு. சாந்தி உதவிப்பேராசிரியர் வரவேற்புரை வழங்கினார். கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களும் பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் இணைப் பேராசிரியரான முனைவர் திரு. வா.மு.சே. ஆண்டவர் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். உலகத் திருக்குறள் பேரவையின் மண்டலச் செயலரான முனைவர் திரு. "நயம்பு" அறிவுடை நம்பி அவர்கள் விழா குறித்து சிறப்பான கருத்துரை வழங்கினார். அவர் உரையாற்றுகையில் ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் பழையதைப் புதியதாகவும் புதியதைப் புதுமையாகக் கொண்டு மிகுந்த தரத்துடன் விளங்குவதாகப் பாராட்டினார். இக்கருத்தரங்கில் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் மட்டுமன்றி முதுவணிகவியல் பயிலும் மாணவியரும் ஆய்வுக்கட்டுரை எழுதியிருப்பது கூடுதல் சிறப்பைத் தருகிறது. விழா இறுதியில் கட்டுரை சமர்பித்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. முனைவர் சு. லட்சுமி, உதவிப்பேராசிரியர் (சுயஉதவிப் பிரிவு) நன்றியுரைக் கூற விழா இனிதே நிறைவுற்றது.

முத்தமிழ் விழா 01.02.2019 அன்று கல்லூரி கலையரங்கில் நடைப்பெற்றது. தமிழின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றவும் இயல், இசை, நாடகம் என்ற தமிழின் சிறப்பை மாணவிகளுக்கு உணர்த்தும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரியில் தமிழ்த் துறை சார்பாக முத்தமிழ் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. முத்தமிழ் விழாவில் இயல் தமிழ் விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகத் தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன் அவர்கள் தலைமைத் தாங்கினார். கார்க் தொழில் நிறுவனத்தின் தலைவரான திரு. எஸ்.என். பட் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர் உரையாற்றுகையில் "உலகத்தில் விரைந்து செல்லக் கூடியது சொல். ஓவ்வொரு மாணவியும் தாய்மொழி தவிர இரு மொழியாவது கற்றுக் கொள்ள வேண்டும். உன் இளமைப் பருவத்தில் உன்னால் எவ்வளவு படிக்க முடியுமோ அத்தனையும் படித்து பதிவேற்றம் செய்ய வேண்டும்" என்றார். சிறப்பு விருந்தினர் மூன்றாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி மு. சங்கீதா எழுதிய "கிழிந்த சட்டைபை" என்ற கவிதை நூலை வெளியிட்டு, இலக்கியமன்றம் சார்பில் நடைப்பெற்ற பல்வேறுப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கினார்.

இசைத்தமிழ் விழாவுக்கு "இசைக்கவி" ரமணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொண்டு "எவன் ஒருவன் இசைக்கு மதிப்பு கொடுக்கிறானோ அவனே மகிழ்ச்சியாக இருக்கிறான். எங்கும் நிறைந்து உள்ளது இசை. செவி திறந்தால் சித்தத்திற்குள் நுழையும் தன்மை கொண்டது இசை" என்று சிறப்புரையாற்றினார். அடுத்து மாணவிகளின் தனிப்பாடல், குழுப்பாடல், பரதம், வீணை, கரகம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.

நாடகத்தமிழ் விழாவிற்கு நாடக நடிகரான "நாடகத் தென்றல்" அப்பா ரமேஷ் (கிரேசி கிரியேஷன்ஸ்) அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொண்டார். அவர் சிறப்புரையாற்றுகையில் கூத்து கலையே சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து நாடகமாக இன்று மாறி உள்ளது. ஒரு நாடகத்திற்கு நடிப்பு, ஒப்பனை, அரங்கு, ஒலி, ஒளி அமைப்பு எல்லாம் மிக முக்கியம் என்றார். பக்த பிரகலாதா, இளையான்குடி மாற நாயனார் ஆகிய நாடகங்களை மாணவிகள் நடித்துக் காட்டினர். அனைவரும் மாணவிகளின் நாடகத்தைப் பார்த்து வெகுவாகப் பாராட்டினர். விழா இனிதே நிறைவுற்றது.

முனைவர் தி. செந்தமிழ்ச்செல்வி (தமிழ்த்துறைத்தலைவர்)

திராவிட பல்கலைக்கழக மாணவர் என். லோகநாத குமார் முனைவர் பட்ட ஆய்விற்கு நெறியாளராக வழிகாட்டியுள்ளார்.

5.10.2018 - மாணவர் கம்பர் விழாவில் ‘திறன் பயிற்றுநர் விருது’ பெற்றுள்ளார்.

18.01.2019 - ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் மாணவர் கம்பர் கழகம் நடத்திய கல்வி வாயில் தோறும் கன்னித்தமிழ் நிகழ்ச்சியில் ‘ஆசிரியப்பணிச் செம்மல் விருது’ பெற்றுள்ளார்.

6.International Seminar - Vainavathil melanmai Chinthanaigal-22/03/2019- ISBN NO- 978-93-81006-21-4